...ered as a ... Lanka No. ...

# ஐக்கிய தீபம்

தெணியான்

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக் குழு) வெளியீடு

மலர்: 31
இதழ்: 5

தை
1976

## இந்த இதழில்....


- ஆசிரியர் தலையங்கம்
- இலங்கைக் கூட்டுறவு இயக்கம்
- இலங்கைக் கூட்டுறவு இயக்கம்: தோற்றுவாயும் வளர்ச்சியும்
- கூட்டுறவு என்பதென்ன?
- பெரிய ஆரம்ப ப. நோ. கூ. சங்கங்களின் மாதிரி நடைமுறைப் பிரமாணங்கள்


POSTAGE CEYLON 0.10

# ஐக்கியதீபம்

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு "

மலர் 31 | யாழ்ப்பாணம், தை 1976 | இதழ் 5


இதுணியான்

## புத்தாண்டுச் சங்கற்பம்

புத்தாண்டு பிறக்கும் போது, அவ்வாண்டிலே மேற்கொள்ள வேண்டியவை குறித்தும், ஒதுக்க வேண்டியவை குறித்தும் உறுதி பூணுவது வழக்கம்.

கூட்டுறவு இயக்கத்தோடு தொடர்புள்ள சகலரும் இச்சம்பிரதாயத்திற்கு ஏற்ப இப்புத்தாண்டிலே சில தீர்மானங்களை எடுத்து, அவற்றிற்கு அமைவாக ஒழுகுதல் நன்மை பயக்கும்.

உறுப்பினர்கள் இன்றேல் சங்கமில்லையென்பதைப் பலர் மறந்து விடுகின்றனர். உரிய பங்குப் பணத்தைச் செலுத்தி உறுப்பினராகச் சேர்ந்த பின்பு, மேலும் சங்க அலுவல்களில் அக்கறை கொள்ள வேண்டியதில்லை என்ற உளப்பாங்கு கணிசமான உறுப்பினர்களிடையே குடிகொண்டிருக்கிறது. இது இலங்கைக்கு மட்டுமே உரித்தான 'நோய்' என நினைப்பது தவறு. கூட்டுறவுத் துறையிலே முன்னேற்றம் கண்டுள்ள நாடுகளில் கூட, உறுப்பினர் சங்கத்தில் போதிய அக்கறை எடுப்பதில்லை என அங்கலாய்க்கப்படுகிறது. இது எவ்வாறாக இருப்பினும் எமது நாட்டைப் பொறுத்தவரை, உறுப்பினரின் அக்கறையின்மை சங்கங்களைப் பலவீனப்படுத்துவதற்கு வழிகோலியிருக்கின்றது என்பது வெள்ளிடைமலை. இப்புத்தாண்டிலே, உறுப்பினர்கள் தமது சங்க அலுவல்களிலே கூடுதலான அக்கறை எடுப்பதெனச் சங்கற்பம் செய்ய வேண்டும். ஒழுங்காகக் கூட்டங்களுக்குச் செல்வதோடு, சங்க உபவிதிகளையும், கூட்டுறவுத் திணைக்களம் காலத்துக்குக் காலம் வெளியிடும் சுற்றறிக்கைகளையும் நன்கு அறிந்திருப்பதற்கு அவர்கள் விழைய வேண்டும். அப்பொழுதுதான் உறுப்பினர்கள் தமது சங்க அலுவல்களைக் கண்காணிப்பதோடு, சங்கத்தின் செயற்பாடுகளிலும் பயனுள்ள முறைகளில் பங்கு பற்றலாம்.

நெறியாளர் குழுவே சங்கம் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளை வரையறுத்து, அவைசெயற்படுத்

தப்படுவதை மேற்பார்வை செய்ய வேண்டும். சங்கத்தை நெறிப்படுத்துபவர்கள் அவர்களே. எனவே நெறியாளர் தமது செய்கடமைகளைச் செவ்வனே ஆற்றத் தவறினால் சங்கம் சீர்குலையும். இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர். ஆகவே இப்புத்தாண்டிலே தமது கடமைகளையும், செய்கடமைகளையும் செம்மையாக ஆற்றுவதென நெறியாளர் தீர்மானிப்பதோடு அத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவும் வேண்டும். சட்டதிட்டங்களுக்கும், உபவிதிகளுக்கும் அமைவாக அவர்கள் நடப்பதோடு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவர்கள் விழைய வேண்டும். இவர்களின் செம்மையான தலைமையிலேயே சங்கத்தின் வெற்றி கணிசமாகத் தங்கியிருக்கின்றது.

சில கிளைக்குழு உறுப்பினர் விரக்தி அடைந்த நிலையில் இருப்பதை அவதானிக்கக் கூடியதாயிருக்கின்றது. தங்களுக்கு எந்தவித அதிகாரமுமில்லை, தமது ஆலோசனைகள் ஏற்கப்படுவதில்லை என முறையிடுகின்றனர். சில சமயங்களில் இதில் ஓரளவு உண்மையுமிருக்கின்றது. ஆனால் இதற்காக இவ்வுறுப்பினர் சேவையாற்றாமலும் இருக்க முடியாது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட இவர்கள் மக்களின் நலன்களைப் பேணும் பணியைத் தளராது ஆற்ற வேண்டும். இவ்வாறு செய்யத் தவறின் அது நம்பிக்கைத் துரோகத்துக்கு ஒப்பாகும். ஆதலால் தம்மைத் தெரிவுசெய்த மக்களின் நலன்களை மேலும் பேணுவதென்று அவர்கள் இப்புத்தாண்டிலே சங்கற்பம் செய்ய வேண்டும்.

பணியாளரே சங்கத்தின் அச்சாணி. அவர்களுடைய செயற்பாடுகளே சங்கத்தின் தலைவிதியைப் பெரும்பாலும் நிர்ணயிக்கின்றன. அவர்கள் நேர்மையற்றவர்களாகவோ சோம்பேறிகளாகவோ இருப்பின் சங்கம் அழிவது திண்ணம். இன்று பெரிய ஆரம்பச் சங்கங்கள் ஆற்றிவரும் சேவைகளையும் அதன் செயற் பரப்பையும் நோக்குமிடத்து இவ்வழிவு முழுச் சமூகத்தையும் பாரதூரமாகப் பாதிக்கும். ஆகவே நேர்மையாகவும், கடமையுணர்வோடும் பண்பாகவும் நாம் பணியாற்றுவோம் எனப் புத்தாண்டிலே பணியாளர் உறுதி பூணவேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தோடு தொடர்புள்ள சகலரும் 'மக்கள் சேவை மகேஸ்வரன் சேவை' என்பதை நினைவில் இருத்துவார்களாக.

(முற்றொடர்)

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்

(கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையத்தின் வெளியீடு)

## தேசிய மட்ட நிறுவனங்கள்

அண்மைக் காலங்களில் குறிப்பாக 1971 இல் நடைபெற்ற மறுசீரமைப்பிற்குப் பின்னர், உச்ச நிறுவனங்களின் தேவை புலப்படலாயிற்று. விவசாயம், நுகர்வு கைத்தொழில் துறைகளிலே, இத்தேசிய மட்ட நிறுவனங்கள் தேசீய உச்ச நிறுவனங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. அவையாவன முறையே இலங்கை சந்தைப்படுத்துதல் சம்மேளனம், கூட்டுறவு மொத்த வியாபார தாபனம், இலங்கைக் கூட்டுறவு கைத்தொழிற் சமாசம். கூ. மொ. வினைத் தவிர்த்து (அது இன்னும் அரசு கூட்டுத் தாபனம்) மற்றைய நிறுவனங்கள் இலங்கை தேசீய கூட்டுறவுச் சபையின் உறுப்பினர்கள். மூன்றும் மட்ட நிறுவனமாகிய தேசீய கூட்டுறவுச்சபை முழு இயக்கத்தினதும் கோட்பாட்டு உச்ச நிறுவனமாகும். இவற்றைத் தவிர, வேறு சில தேசிய மட்ட நிறுவனங்களுமுண்டு: இவை, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சங்கங்களுக்கு தத்தமது துறைகளிலே சேவையாற்றுகின்றன. அவையான: இலங்கை தெங்குப் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க சமாசம், இலங்கை றப்பர் கூட்டுறவுச் சங்க சமாசம், இலங்கை மீன் விற்பனவு சமாசம். இச் சமாசங்களும் இலங்கை தேசீய கூட்டுறவுச் சபையின் உறுபினர்கள்.

## இலங்கைக் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் சம்மேளனம்.

விவசாயத் துறையிலே பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேவையாற்றுவதற்கு இலங்கைக் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் சம்மேளனம் உச்ச நிறுவனமாக உருவாக்கப்பட்டு வருகின்றது. விவசாய இடு பொருள்களை வழங்குதல், விவசாய உபகரணங்களின்

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தல், விளைபொருள்களைச் சேகரித்தல், சந்தைப்படுத்துதல், தேவை ஏற்படின் அவற்றைப் பதனிடுதல், விவசாயத்திற்குக் கடன் வசதிகளை அமைத்துக் கொடுத்தல், கம ஆலோசனை, வழிநடாத்துதற் சேவைகளை ஏற்படுத்திக் கொடுத்தல் — இவ்வாறான பணிகளை மேற்கொண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆதரவு அளிப்பதே இந் நிறுவனம் வகிக்கும் புதிய பங்காகும்.

எல்லா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இச் சம்மேளனத்தின் உறுப்பினர்கள். எந் நிறுவனத்தின் பொதுச் சபை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பேராளர்களைக் கொண்டது. ஒவ்வொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் ஒரு பேராளரை அனுப்புகின்றது.

மாவட்ட அடிப்படையில் பொதுக் கூட்டத்திலுல் தெரிவு செய்யப்பட்ட 26 பேராளர்களையும், நெறியாளர் குழுவிற்கு கூட்டுறவு ஆக்க ஆணையாளரால் நியமிக்கப்பட்ட 5 நெறியாளர்களையும் கொண்டது மத்திய குழு.

நிறை வேற்றுக்குழு ஒன்றும் உண்டு. இது நெறியாளர் குழுவென்றும் அழைக்கப்படுகின்றது. தமது உறுப்பினர்களிடையேயிருந்து நால்வரை மத்திய குழு நெறியாளர்களாகத் தெரிவு செய்கின்றது. கூட்டுறவு ஆக்க ஆணையாளர் ஐவரை நியமிக்கின்றார். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர் சம்மேளனத்தின் மாவட்ட ஆலோசனைக் குழுவில் இடம் பெறுகின்றனர். இக் குழுவின் தவிசாளர் மத்திய குழுவில் இடம் பெற்றுள்ள மாவட்ட பேராளர்.

தான் வகிக்கும் புதிய பங்கிற்கு ஏற்ப சந்தைப் படுத்துதல் சம்மேளனம் விவசாயத்துறைக்குச் சேவையாற்றும் பொருட்டு தனது செயற்பாடுகளை விரைவாக விரிவுபடுத்தி வருகின்றது.

1973–74 பெரும் போகத்தில், அம்பாந்தோட்டையிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊடாக நெல், உர விற்பனை விநியோக முன்னோடித் திட்டம் ஒன்றினை அது செயற்படுத்தியது. இதன் விளைவாக, முன்னைய ஆண்டுகளில் விற்பனையா

கிய ஆகக் கூடுதலான உர விற்பனைத் தொகையை விட 287 வீதம் உர விற்பனை அதிகரித்தது. மிளகு, கராம்பு, சாதிக்காய் ஆகிய சிறு ஏற்றுமதிப் பயிர்களை கலகெத்தர பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சேகரித்து, தரம்பிரித்து, விற்பனை செய்வதில் இப்பொழுது சம்மேளனம் முன்னேடித் திட்டம் ஒன்றினை செயற்படுத்துவதில் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றது. அம்பாந் தோட்டை மாவட்டத்தில், விளைபொருள்களை ஒப்பந்த அடிப்படையில் கொள்வனவு செய்வதுடன் விவசாயிகளுக்குக் கல்வி ஊட்டுவதையும் இணைத்து ஒரு திட்டமொன்றினை சம்மேளனம் செயற்படுத்தவிருக்கின்றது.

அரசு வர்த்தக கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்படும் உழவு இயந்திரங்களை விற்பனை செய்வதற்கும் அவற்றிற்கு சீர்காப்பு ஏற்பாடுகள் செய்து கொடுப்பதற்கும் சம்மேளனமே ஏக முகவராகும். 1973 இல் 9½ மாதங்களில் சம்மேளனத்தின் மொத்த வியாபாரச் சுழற்சி ரூ 9·1 கோடி. இதே கால எல்லையில், வெற்றிலை ஏற்றுமதி மூலம் சம்மேளனம் 77,533 பவுண் அன்னிய செலாவணியைப் பெற்றது.

## இலங்கைக் கூட்டுறவுக் கைத்தொழிற் சமாசம்

கூட்டுறவுக் கைத்தொழிற் துறைக்குச் சேவையாற்றும் தேசீய உச்ச நிறுவனமாக இலங்கைக் கூட்டுறவுக் கைத்தொழிற் சமாசம் தன்னை உருமாற்றிக் கொண்டிருக்கின்றது. 15–5–75 இல் நடைமுறையில் வந்த அதன் உப விதிகளின் படி, சமாசத்திற்குப் பின்வரும் நோக்கங்களுமுண்டு: தேசீய அபிவிருத்தித் திட்டங்களின் பின்னணியில் கூட்டுறவு கைத்தொழில்களை ஊக்குவித்து வளர்த்தல், கூட்டுறவுக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு வேண்டிய தொழில்நுட்ப, நிதி, முகாமை, சட்டத்துறை சார்ந்த சேவைகளையும் வேறு சேவைகளையும் வழங்குதல், உறுப்புரிமை வகிக்கும் சங்கங்களின் செயற்பாடுகளுக்கிடையே இணைப்பை ஏற்படுத்துதல், கூட்டுறவு கைத்தொழில்களின் வளர்ச்சியில் அக்கறையுள்ள பிரதேச, அனைத்துலக நிறுவனங்களுடன் ஒத்துழைத்

தல். இந் நோக்கங்களை எய்தும் பொருட்டு, சமாசம் தனது உபவிதிகளின் படி பின்வருவனவற்றைச் செய்யலாம்: சாத்தியப்பாடு அறிக்கைகளைத் தயாரித்தல், தேவையான நிதிகளைப் பெறுதல், உறுப்பினர்களுக்குத் தொழில் நுட்ப உதவியையும் ஆலோசனையையும் வழங்குதல்; மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல், உற்பத்தியில் ஒத்திசைவை ஏற்படுத்துதல், மூலப் பொருட்களின் பயன்பாட்டில் வீண் விரயத்தைத் தவிர்த்தல், உறுப்பினர்களின் கைத்தொழில் உற்பத்திப் பொருள்களை, உள்ளூரிலும் வெளியிலும் சந்தைப்படுத்துதல் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடும் பதியப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இச்சமாசத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

சமாசத்தின் பொதுச் சபை, உறுப்புரிமை வகிக்கும் சங்க பேராளரையும் நெறியாளர் குழு உறுப்பினரையும் கொண்டது. நெறியாளர் குழுவின் 9 உறுப்பினர்களில், நால்வர் பொதுச் சபையினால் தமக்குள்ளிருந்து தெரிவு செய்யப்படுகின்றனர், ஐவர் கூட்டுறவு ஆக்க ஆணையாளரால் நியமிக்கப்படுகின்றனர்.

இதுகாலவரையும் சமாசம் தனது உற்பத்திப் பொருள்களிலேயே அக்கறை செலுத்தி வந்திருக்கின்றது. மாதம்பே, உந்துகொட, நாவின்ன ஆகிய இடங்களில் சமாசம் மூன்று தொழிற் சாலைகளை நடாத்திவருகின்றது. முதல் இரு தொழிற்சாலைகளும் திரிக்கப்பட்ட தும்பையும், பதனிடப்பட்ட ரப்பர் பாலையும் உற்பத்தி செய்கின்றன. இம்மூலப் பொருட்களைக் கையாண்டு நாவின்னவிலுள்ள தொழிற்சாலை ரப்பர் கலந்த தும்பு மெத்தைகளை உற்பத்திசெய்கின்றது. திரிக்கப்பட்ட தும்பு, பதனிடப்பட்ட ரப்பர் பால் ஆகியவற்றினதும் ரப்பர் கலந்த தும்பு மெத்தைகளினதும் மேலதிக உற்பத்தி உள்ளூரிலும் வெளியிலும் சந்தைப்படுத்தப்படுகின்றன.

1973இல் தனது கைத்தொழில் முயற்சிகள்மூலம் இச்சமாசம் வியாபாரச் சுழற்சியாக ரூ. 35 இலட்சத்தைப் பெற்றது. அன்னிய செலாவணி சான்றிதழ் உட்பட ரூ. 135, 142

ஏற்றுமதிகள் மூலம் பெற்றது.

**கூட்டுறவு மொத்த வியாபார நிறுவனம்**

பண்டசாலைச் சங்கங்களுக்கு வேண்டியவற்றைப் பெற உதவி செய்யும் பொருட்டு கூட்டுறவுத் திணைக்களத்தின் ஒரு பகுதியாக 1943 இல் கூ. மொ. வி. தொடங்கப்பட்டது. காலப் போக்கில் இதன் பங்கு விரிவடைந்துள்ளது. கூட்டுறவு இயக்கத்திற்குச் சேவையாற்றுவதோடு, நாடுமுழுவதற்குமென இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை மட்டங்களையும் வழங்கீடுகளையும் பேணும் பொறுப்பை அரசாங்கத்தின் சார்பாக அது நிறைவேற்றுகின்றது

இன்று இலங்கையிலே கூ. மொ. வி. யே மிகப் பெரிய மொத்த வியாபார நிறுவனம். ஏறக்குறைய 6000 பேருக்கு அது வேலை வாய்ப்பு அளித்துள்ளது. முக்கிய நகரங்களில் கூ. மொ. வி. மொத்த வியாபார நிலையங்களை நிறுவியுள்ளது. சங்கங்களின் தொழிற் பரப்பிலிருந்து 30–40 மைல்களுக்குள் நிறுவப்பட்டுள்ள இந் நிலையங்கள் சங்கங்களுக்கான வழங்கீடுகளை உறுதிப்படுத்துகின்றன. 1973 இல் கூ. மொ. வியின் மொத்த விற்பனையின் பெறுமதி ரூ. 32 கோடி கூ. மொ. வி. யின் மொத்த விற்பனையில் 85 வீதம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் நடைபெறுகின்றது. ஏறக்குறைய 80 வீத விற்பனை உணவுப்பொருள்களாகும். 20 வீதமே உணவுப் பொருட்கள் அல்லாதவை. இதற்குக் காரணம் உணவுப் பொருட்கள் அல்லாதவற்றின் பெரும் பகுதி வேறு அரசு கூட்டுத்தாபனங்களுக்குக் கையளிக்கப் பட்டுள்ளமையே.

கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் நுகர்ச்சிப் பொருட்களைக் கொள்வனவு செய்து வழங்குவதே கூ. மொ. வி. யின் பொறுப்பாகும். நுகர்ச்சியாளரின் உச்சக் கூட்டுறவு நிறுவனம் என்ற புதிய பங்கினை வகிக்கும்போது, ஏனைய கூட்டுறவு உச்ச நிறுவனங்களுடன் அது செயற்பாடுகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதன் மற்றும் பொறுப்புக்கள் வருமாறு: முதல் கூறப்பட்ட நோக்கத்தை எய்தும் பொருட்டு பிரதேச களஞ்சிய முறையை அமைத்தல்; சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அபிவிருத்தி செய்வதிலும் சந்தைப் படுத்துவதிலும் உறுப்புரிமை வகிக்கும் சங்கங்களுடன் ஒத்துழைத்தல்; கூட்டுறவுச் சங்கங்

களுக்குத் தொடர்ச்சியான வழங்கீடுகளை உறுதிப்படுத்தும் பொருட்டும் புதிய வியாபாரத்தை வளர்ப்பதற்கும் நுகர்ச்சிகளுக்குச் சேவையாற்றும் கைத்தொழில்களைச் சொந்தமாகத் தொடக்கி அபிவிருத்தி செய்தல்; நுகர்வுத்துறையில் சங்கங்களுக்குத் தேவைப்படும் முகாமை, பொருளாதார கல்வி ஆலோசனைச் சேவைகளையும் உதவிகளையும் வழங்குதல்; அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதி, நியாயமான பங்கீடுபற்றி அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கைகளைத் தொடர்ந்து செயற்படுத்துதல்.

இப்போதைய நெறியாளர் குழுவில் 9 பேர் இடம்பெற்றுள்ளனர் வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ள இவர்களில், மூவர் கூட்டுறவு இயக்கத்தின் பிரதிநிதிகள். கூட்டுறவு ஆக்க ஆணையாளர் பதவிவழி நெறியாளர், நடைமுறையில் அரசு கூட்டுத்தாபனமான கூ. மொ. வி. யை உச்ச நுகர்வு நிறுவனமாக காலப்போக்கில் சட்டப்படி நிறுவுவது அவசியமாகும்.

## தெங்குப் பொருள், ரப்பர், மீன் விற்பனை சமாசங்கள்

### தெங்குப்பொருள்

தேங்காய் எண்ணெய் விற்பனையை இலங்கை தெங்கு பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் மேற்கொள்ளுகின்றது. சவர்காரத்தை அது நேரடியாக உற்பத்தி செய்வதுடன் உலர்ந்த தேங்காய்த் துருவலை ஏற்றுமதி செய்வதற்கு உறுப்புரிமை வகிக்கும் சங்கங்களுக்கு உதவியளிக்கின்றது.

உறுப்புரிமை வகிக்கும் 10 தெங்குப் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளே சமாசத்தின் பொதுச்சபை ஆவர். பொதுச் சபையினால் தெரிவு செய்யப்பட்ட 9 பேர் நெறியாளர் குழு ஆவர்.

1973 இல் சமாசத்தின் வருடாந்த விற்பனைச் சுழற்சி ரூ. 949,148.

### ரப்பர்

உறுப்பினராகிய சிறு உற்பத்தியாளரிடமிருந்து உறுப்புரிமை வகிக்கும் சங்கங்கள் சேகரித்த தட்டு ரப்பரையும், துண்டு ரப்பரையும் இலங்கை ரப்பர் கூட்டுறவுச் சங்க சமாசம் கொள்வனவு செய்வதிலும், தரம்பிரிப்பதிலும், சந்தைப்படுத்துதலிலும் ஈடுபடுகின்றது. பொருள் பண்ட கொள்வனவு ஆணையாளரின் கீழ் இச் சமாசம் கப்பல் வணிகராகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை—சீன ரப்பர் ஒப்பந்தத்தின்கீழ் இச் சமாசமே உயர்தர ரப்பர் முழுவதையும் சீனவுக்கு ஏற்றுமதி செய்கின்றது.

சமாச நெறியாளர் குழுவில் பொதுச்சபையினால் தெரிவுசெய்யப்பட்ட 9 பேர் இடம்பெறுகின்றனர். இவர்களில் மூவர் ரப்பர் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகள், அறுவர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகள். பொதுச் சபை உறுப்புரிமை வகிக்கும் பேராளர்களைக் கொண்டது. உறுப்பினர்களின் தொகை தற்பொழுது 28.

1973 இல் அதன் வருடாந்த விற்பனைச் சுழற்சி ரூ. 1,673,567: இத்தொகை முழுவதும் ஏற்றுமதியால் ஈட்டப்பட்டது.

### மீன்

உறுப்புரிமை வகிக்கும் சங்கங்களுக்கு விரிவாக்கல் சேவைகளையும், நிதி உதவியையும் வழங்குவதிலேயே இலங்கை கூட்டுறவு மீன் விற்பனைச் சமாசம் இப்பொழுது பெரும்பாலும் ஈடுபட்டு வருகின்றது.

9 உறுப்பினர்களைக் கொண்ட நெறியாளர் குழுவில், ஐவரை பொதுச்சபை தெரிவு செய்கின்றது. நால்வரை கூட்டுறவு ஆக்க ஆணையாளர் நியமிக்கின்றார். பெரிய ஆரம்ப கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் பொதுச்சபையில் இடம் பெறுகின்றனர்.

### ஸ்ரீ லங்கா தேசியக் கூட்டுறவுச் சபை

1973 இல் நிறுவப்பட்ட ஸ்ரீ லங்கா தேசியக் கூட்டுறவுச்சபை இலங்கை கூட்டுறவுச் சம்மேளனத்தின் வாரிசு. இதுவே, உச்சக் கோட்பாட்டு நிறுவனம், முழு இயக்கத்தினது பிரதிநிதி. 1973 இறுதியில் அதன் உறுப்பினர் தொகை 650. அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் பூரண உறுப்பினரான இச்சபை உலகிலுள்ள கூட்டுறவு இயக்கங்களோடு தொடர்பு கொண்டிருக்கின்றது.

தேசீய கூட்டுறவுச்சபையின் பொதுச்சபை 182 பேராளர்களையும் (இவர்கள் கூட்டுறவுத் திணைக்களத்தின் நிருவாக மாவட்டங்களைத் தழுவிய 26 நிருவாக மாவட்டங்களின் பிரதிநிதிகள்) 5 தேசீய மட்ட நிறுவனங்களின் பேராளர்களையும் கொண்டது. ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள உறுப்புரிமை வகிக்கும் சங்கங்கள் 7 பேரை மாவட்ட குழுவிற்கு தெரிவு செய்கின்றன. இவர்களில் நால்வர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப்பிரதிநிதிகள். மாவட்டக் குழுக்களின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் எல்லோரும், தேசீய கூட்டுறவுச்சபையின் பொதுச்சபைப் பேராளர்கள். வருடாந்தப் பொதுக்கூட்டத்தில், அவர்கள் 9 மாகாணங்களைப் பிரதிநிதிப்படுத்துவதற்கு 9 பேரை நெறியாளர்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்கின்றனர். ஒவ்வொரு பேராளரை பொதுச்சபைக்கு அனுப்பும் தேசீய மட்ட கூட்டுறவு நிறுவனங்கள் மூன்று நெறியாளரைத் தெரிவு செய்ய உரிமை பெற்றுள்ளன. தெரிவு செய்யப்பட்ட 12 நெறியாளர்களிலிருந்து முழுப் பொதுச்சபையும் தலைவரையும் உபதலைவரையும் தெரிவு செய்கின்றது. தேசீய கூட்டுறவுச் சபையின் பொதுச்செயலாளரே பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்.

கூட்டுறவுச் செயற்பாடுகளுக்கிடையே இயைபை ஏற்படுத்துதல், முழுக்கூட்டுறவு இயக்கத்திற்கும் பேச்சாளராகச் செயற்படுதல், கூட்டுறவுப்பயிற்சி அளித்தல், உறுப்பினர்க்குக் கல்வி ஊட்டுதல் — இவையே தேசீய கூட்டுறவுச்சபையின் முக்கிய பொறுப்புக்கள். இறுதியாகக் குறிப்பிடப்பட்ட இரண்டு முயற்சிகளையும் தேசியக் கூட்டுறவுச்சபை கூட்டுறவுத் திணைக்களத்துடனும் பொல்கொல்லைக்

கூட்டுறவுக் கல்லூரியுடனும் நெருங்கி இணைந்து மேற்கொள்ளுகின்றது.

கூட்டுறவுப் பயிற்சியின் கீழ் பணியாளர்களுக்கு அஞ்சல் மூலம் அது பயிற்சி அளிக்கின்றது; இதன்மூலம் பணியாளர் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் (கனிஷ்ட பிரிவு) பத்திரத்தைப் பெறலாம். தேசிய கூட்டுறவுச்சபையினால் நடாத்தப்பட்டுவரும் 26 மாவட்டக்கல்வி, பயிற்சி நிலையங்களில் கூட்டுறவு பணியாளர் தராதர (சிரேஷ்ட பிரிவு) பத்திரப்பரீட்சைக்கு மாணவர்கள் பயிற்றப்படுகின்றனர். சேவையிலுள்ள பணியாளர்களும் வருங்காலப் பணியாளர்களும் இப்பயிற்சி நெறியைப் பயிலலாம். எல்லா நிலையங்களிலுமுள்ள மொத்த இடங்களின் எண்ணிக்கை 1040 (சாதாரண பிரிவுக்கு). சேவையிலுள்ள பணியாளர்களுக்கும் வருங்காலப் பணியாளர்களுக்கும் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உயர்பிரிவு பயிற்சி நெறிகள் நடாத்தப்படுகின்றன. பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரி பயிற்சி நெறிகளைத் தரப்படுத்துகின்றது: இக்கல்லூரியே பரீட்சைகளை நடாத்தி சான்றிதழ்களை வழங்குவதற்குப் பொறுப்பாகவுள்ளது. வியாபார உச்ச நிறுவனங்களின் வளர்ச்சியின் விளைவாகவும் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி ஆய்வுகள் பயிற்சிநெறி அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாலும், கூட்டுறவுப்பயிற்சியை அணுகும் முறையில் இயைபு தேவைப்படுகின்றது.

உறுப்பினர்களுக்குக் கல்வியூட்டுவது தேசிய கூட்டுறவுச் சபையின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகும். கருத்தரங்குகள், மகாநாடுகள், வெளியீடுகள், வானொலி பரப்புதல்கள், கூட்டுறவுத் தினக்கொண்டாட்டங்கள் ஆகியவை மூலம் இது நடைபெறுகின்றது. இத்திட்டங்களை செயற்படுத்துவதில் கூட்டுறவுத் திணைக்களத்தின் விரிவாக்கல் பிரிவு கூட்டுறவுச் சபையுடன் இணைந்து செயலாற்றுகின்றது.

கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் உள்ள கூட்டுறவு நிதியிலிருந்து வருடாந்த கொடை வழங்கீடாக தேசீயக் கூட்டுறவுச்சபைக்கு நிதிகள் வழங்கப்படுகின்றன.

(முற்றும்)

(முற்றொடர்)

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்: தோற்றுவாயும் வளர்ச்சியும்

(G. குருகுலசூரியா யாத்த நூலைத்தழுவி எழுதப்பட்டது)

உறுப்புரிமை வகிக்கும் ஒவ்வொரு 100 சங்கங்களுக்கும் 1 பேராளர் என்ற அடிப்படையில் கூட்டுறவுச் சம்மேளனத்திற்கு மாவட்ட ஒன்றியங்கள் பேராளர்களை அனுப்ப வேண்டும் என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. சம்மேளனத்திற்கு வேண்டிய நிதி பற்றியும், குறிப்பாகச் சங்கங்களின் சுத்த லாபத்தில் அப்பொழுது அறவிடப்பட்ட கணக்குப் பரிசோதனை, மேற்பார்வை நிதியிலிருந்து இதனைப் பெறுவது பற்றியும், ஆராயப்பட்டது.

இக்கூட்டத்திற்குப் பின்னர், திரு. வீரசிங்கம் பதவியைத் துறந்தார். திரு. D. E. ஹெட்டியாராய்ச்சி தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். பின்வருவோர் மத்திய நிருவாக சபை உறுப்பினர்கள்:

திருவாளர்கள்: B. R. de சில்வா, (துணைத்தவிசாளர்) P. F. A. குணத்திலக்கா, A. N. de A. அபேயசிங்கா, C. A. ஹரிஸ்சந்திரா, திரு. W. K. பொன்சேகா செயலாளராயிருந்தார்.

''சமுபகாரயா'' என்ற வெளியீட்டினை சம்மேளனம் பொறுப்பேற்று மாதம் இருமுறை அதனை இலவசமாக எல்லாச் சங்கங்களுக்கும், சில நூலகங்களுக்கும் அனுப்பியது. அத்துடன் அனைத்துலகக் கூட்டுறவுத் தினத்தில் கூட்டுறவுப் பிரசாரத்தினை அது மேற்கொண்டது. கொழும்பில் கூட்டுறவு கல்வி நிலையம் தொடங்கப்பட்டது. வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுக் கல்லூரியொன்றினைத் தொடர்ந்து நடாத்தியது. கூட்டுறவுத் திணைக்களம் பொல்கொலையில் நடாத்திய கூட்டுறவுக் கல்லூரி மேற்கொண்டிருந்த பணிகளின் சில அம்சங்களை இது பூரணப்

படுத்தி வந்தது. நற்பேறாக, 1957 இல் சம்மேளனம் தனக்கெனச் சொந்தமான தலைமை அலுவலகத்தைக் கொழும்பில் பெற்றது. கௌரவ விவசாய அமைச்சர் ஆசாரப்படி கட்டிடத்தைத் திறந்து வைத்தார். அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் தலைவர் திரு. மார்சல் புரொட்டும் வேறு 6 உத்தியோகத்தரும் இவ்வைபவத்திற்குச் சமுகமளித்தனர்.

**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்**

1957-ம் ஆண்டின் பிற்பகுதியில், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவதற்கான இயக்கம் தொடங்கப்பட்டது. இது இலங்கையில் கூட்டுறவுக் கோட்பாட்டில் புதிய திருப்பம் எனலாம். அதுவரை, சில குறிப்பிடப்பட்ட மாற்றங்கள் அனுமதிக்கப்பட்டபோதும், எல்லா உறுப்பினர்களாலும் விரும்பப்பட்ட குறிக்கோள்களுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காகச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. ஒரு தனிச் சங்கத்திற்குள் (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில்) பல்வேறுசெயல் நோக்கங்களைப் புகுத்த விழைந்ததின் குறிக்கோள் யாதெனில் ஒரு தனி நிறுவனத்தின் தொழிற் பரப்பில் வாழும் மக்களிடையே பொதுப் பற்றுக்களையும் தொடர்புகளையும் உருவாக்குவதாகும். இதனால் எழுந்த பிரச்சினை யாதெனில் உப விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள பரந்த குறிக்கோள்களில் ஒரு பகுதியிலேயேதான் குழுக்களாக அமைந்த பெருந்தொகை உறுப்பினர் ஆழ்ந்த அக்கறை எடுத்தனர். சில குறிப்பிட்ட சமூக, பொருளாதார நிலைமைகளில் இம் மாற்றம் விரும்பத்தக்கது என்பது கண்கூடு. பரிசோதனைத் தன்மை வாய்ந்த இப் பொது விதியின் செயற்திறன் நடைமுறையில்தான் தென்படும்.

சந்தைப்படுத்துதல் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட நாட்களிலிருந்தே ஒரு பகுதியிலுள்ள கடனுதவு சங்கங்களுக்கும் சந்தைப்படுத்துதல் சங்கங்களுக்குமிடையே நெருங்கிய உறவுகள் இருத்தல் வேண்டுமென்பதும், ஒன்று மற்றதில் தங்கியிருந்ததென்பதும் உணரப்பட்டது. உள்ளூர் கடனுதவு சங்கத்தின் உறுப்பினராக ஒருவர் இருப்பின் அவரிடமிருந்து கொள்வு

ளவு செய்யப்படும் விளை பொருளுக்குரிய பணம் அக் கடனுதவு சங்கத்ினூடாகச் செலுத்தப்பட வேண்டுமென கூட்டுறவு சந்தைப் படுத்துதல் சங்க உபவிதிகளில் ஏற்பாடு இருந்தது. 1947ம் ஆண்டு தொடக்கம் உருவாகிய அடுத்த கட்டத்தில் ஒரு தனிச்சங்கமே கடனையும் வழங்கி விற்பனைக்கும் ஏற்பாடு செய்தது: இதற்கென நிறுவப்பட்ட சங்கமே விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கம். இதைத் தொடர்ந்து உடப்பலாத்த வெலிமடையில் இணைப்புத் திட்டம் மேற்கொள்ளப் பட்டது. இக்கட்டங்களின் இறுதி வளர்ச்சியாகப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கருதப்பட்டது.

1953ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நடைமுறையில் இயங்கி வந்தன. கல்ஓயா பள்ளத் தாக்கு அபிவிருத்திச் சபையின் முயற்சியே இதற்கு வழிகோலிற்று: பலநோக்கு நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் இது புதிய குடியேற்றப் பகுதியாகும். இக் கூட்டுறவுச் சங்கங்கள் "பொதுச் சேவைகள் கூட்டுறவுச் சங்கங்கள்" எனப்பட்டன. உறுப்பினர்களின் நுகர்வு, உற்பத்தித் தேவைகளை அவை வழங்கியதோடுஅவர்களின் விளைபொருள்களின் விற்பனைக்கும் ஒழுங்கு செய்தன. உறுப்பினர்களின் பல்வேறு தேவைகள் பொருந்திய தனிச்சிறப்பான சூழ்நிலை கல்ஓயாப் பள்ளத்தாக்கில் நிலவியது. 1957 அளவில் இத்தகைய 36 சங்கங்கள் இயங்கி வந்தன. அவற்றின் மொத்த உறுப்பினர் தொகை 5030; மொத்த தொழிற்படுமுதல் ரூ. $1\frac{1}{4}$ இலட்சம். அவற்றின் மொத்த விற்பனை ரூ. 50 இலட்சம், சுத்த ஆதாயம் ரூ. 73,500.

மேலும் இதைப்போன்ற பரிசோதனை பொமிரியா என்னும் இடத்தில் பாற் பண்ணையாளர் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது.

### அமைச்சரின் நெறி ஆணை

1956ல் அரசாங்கம் மாறியதும், விவசாய கூட்டுறவுத் துறையில் வேண்டப்படும் மாற்றங்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஒரு குழுவினை விவசாய உணவு அமைச்சர் நியமித்தார். இக்குழுவின் அறிக்கையை அரசின் திட்டமிடல் குழு ஆராய்ந்து, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவும்படி

தகவுரை செய்தது. இவ் விடயத்தில் அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கை யூலை 1-ம் திகதி 1957 ல் மாண்புமிகு அமைச்சர் பிறப் பித்த பின்வரும் நெறி ஆணையிலிருந்து புலப்படும்.

'' பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ''

இலங்கைக் கூட்டுறவு இயக்கம் 45 வது வயதை எய்திவிட்டது. ஆனாலும் அவப்பேருக அதற்கு இந் நீண்ட கால அனுபவத் திற்கு வழக்கமாகவிருக்க வேண்டிய நிலைப்பாடும் முதிர்ச்சியும் இல்லை. வீரி யம்மிக்க, ஆரோக்கியமான இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தடைகளாகவிருந்த இரண்டு அடிப்படைக் குறைபாடுகளே இதற்குக் காலாயிருந்தன என நான் கருதுகின்றேன்.

முதலாவது குறைபாடு தவறுதலான கோட்பாட் டிலிருந்து தோன்றியது. சமுதாயத்தின் பொருளா தார, சமூக வாழ்வில் அரசு தலையிடலாகாது என்ற அரசியல் தத்துவம் மேலோங்கியிருந்த காலத் தில்தான் நவீன கூட்டுறவு தோன்றியது. அரசின் உத விக்கு மாருக தன்னுதவி, தனக்குத்தானே உதவி யாய் இருப்பவனுக்கு இறை வன் உதவி செய்தல் போன்ற கருத்துக்கள் இத் தத்துவத்தின் இன்றியமை யாத கூறுகளாகும். பல வடி வங்களில் உருவெடுத்த இவ்வெண்ணம் கூட்டுறவு இயக்கத்திலும் வெளிப் படுத்தப்பட்டது. கட்டுப் படுத்தப்படாத பொருளா தார சக்திகளின் கடும் தாக்குதலைத் தணிப்பதற்கு அச்சக்திகளுக்குப் பலியான வர்களால் எடுக்கப்பட்ட முயற்சியே கூட்டுறவு இயக் கம். சமுதாயத்தின் பொரு ளாதார, சமூக வாழ்விலி ருந்து அரசு ஒதுங்கிநின்ற காலத்தில் உருவாகிய சமூக பொருளாதார அமைப் பொன்று — அதன் கோட் பாட்டின் அடித்தளத்தில் மாற்றம் தக்கவாறு ஏற் படாவிட்டால்—அரசு முனை ப்பாக பொருளாதார, சமூக துறைகளைக் கட்டுப் படுத்தி வரும் ஒரு காலத் துக்குப் பொருந்தவே மாட் டாது என்பது தெற்றெ னப் புலப்படும். சுருங்கக் கூறின், இன்றைய கூட்டு றவு இயக்கம் தனது சரி யான பங்கினைச் செலுத்து வதென்ருல், தெரிந்தெடுக் கப்பட்ட சிலரின் குறுகிய நலன்களைத் திருப்திப்படுத் துவதே தனது பணி என்ற

(தொடர்ச்சி 21 ம் பக்கம்)

# கூட்டுறவு என்பதென்ன?

**திரு. எஸ். செல்லையா**
*(விரிவுரையாளர், இலங்கை மன்றக் கல்லூரி)*

மக்கள் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் இயல்பான வழக்கத்திலிருந்தே கூட்டுறவு பிறந்தது. கூட்டுறவென்றால் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளுதல் என்று பொருள், இந்தக் கூட்டுறவு முறை மனித இன வரலாற்றுக்கு முற்பட்டதாகும். ஏனெனில் மிருகங்கள். ஜந்துக்கள், இதர ஜீவராசிகள் ஆதியவற்றிடமும் இந்த வாழ்க்கைமுறை இருந்து வருகிறது. நீங்கள் என்றாவது எறும்புகளின் வாழ்க்கையை அவதானித்திருக்கிறீர்களா? அவற்றின் வாழ்க்கையே ஒரு சிறந்த கூட்டுறவு முறையாக இருப்பதை நீங்கள் உணர முடியும். நமது நாளாந்த வாழ்வில் நாம் பல்வேறு வழிகளில் கூட்டுறவு முறையைக் கைக்கொண்டே வருகிறோம். நாம் நமது அண்டை வீட்டு விவசாயிக்கு கூரை வேய அவனுக்கு உதவி செய்கின்றோம். அவனது வயலில் விதைக்க, விளைச்சலை அறுவடை செய்ய அவனுக்குத் துணை செய்கின்றோம். அவனும் நமக்கு அதுபோல உதவி செய்கிறான். கூட்டுறவு இதில் இழையோடியிருப்பதை நீங்கள் அறிய முடியும். கிராமத்திலுள்ள மக்கள் ஒன்று சேர்ந்து பாதை அமைப்பார்கள். பாலங்களை, மதகுகளைக் கட்டுவார்கள். சமுதாயத்தின் பல்வேறு பிரிவு, மக்கள் எவ்வாறு பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளுகிறார்கள் என்பதற்கு இக்கூட்டு முயற்சியே நல்ல உதாரணம் ஆகும்.

கூட்டுறவு என்பது இயல்பாகவே மனிதனிடம் தோன்றும் உதவி செய்யும் மனப்பான்மையின் உந்தல் என்பதை சமூகவியலாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். என்றாலும் இக்கூட்டுறவு உணர்வு வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தான் முதன் முறையாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. 18–ம் நூற்றாண்டில் பிரிட்டனில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சி தான், வரலாற்று முக்கியத்துவம் பெற்ற காலகட்டமாகும். கைத்தொழிற் துறையில் பொதுவாகப் புகுத்தப்பட்ட 'வேலை குறைப்பு' என்ற புதிய முறை காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கலாயிற்று. தொழிலாளர் வர்க்கத்தினரின் பண வருவாய் இதனால் பாதிக்கப்பட்டது. பொருட்களின் விலையும் சேவைக் கட்டணங்களும் அதிகரிக்கலாயின. தொழிலாளர் வர்க்கத்தினால் இந்தக் கட்டண உயர்வை ஈடு செய்ய முடியவில்லை. பரஸ்பர

நடவடிக்கையினுல்தான் தங்களுக்கு விமோசனம் உண்டு என தொழிலாளர் வர்க்கத்தினர் உணரலாயினர். அவர்கள் நீண்ட பரிசீலனையின் பின்னர் தங்களுக்கு வேண்டிய பொருட்களை நியாயமான விலைக்கு விநியோகம் செய்யும் பண்டசாலைகளைத் தாங்களே நிறுவிக் கொண்டனர்.

1844—ம் ஆண்டிலே லங்காசையரில், ரொச்டேல் என்ற இடத்தில் ஏழைத் தொழிலாளர் குழுவொன்று கூட்டுறவு முறையில் வர்த்தக நிறுவனத்தைத் தோற்றுவித்தது. அன்று அத் தொழிலாளர் குழு தோற்றுவித்த கூட்டுறவு முறைதான் இன்றுவரை உலகெங்குமுள்ள கூட்டுறவாளர்களுக்கு உத்வேகத்தையும், முன் மாதிரியையும் அளித்து வருகிறது. 'ரொச்டேல் சமத்துவ முன்னேடிகள்' என கூட்டுறவு வரலாற்றில் இவர்கள் பெயர் இடம் பெற்றது.

### கூட்டுறவின் இலட்சியங்கள்

'ரொச்டேல்' கூட்டுறவு முன்னேடிகளின் முயற்சி மட்டும் வெற்றியளிக்கக் காரணம் என்ன? அதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு முயற்சிகள் மட்டும் தோல்வியடைந்திருக்கையில், ரொச்டேல் தொழிலாளர்கள் எப்படி வெற்றி கண்டார்கள். அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட அடிப்படை இலட்சியங்களில்தான் அவர்களின் வெற்றியின் இரகசியம் அடங்கியுள்ளது. இன்று பெரும்பாலான கூட்டுறவாளர்கள் அந்த அடிப்படை இலட்சியங்களைத்தான் பின்பற்றி வருகின்றனர். அவையாவன:—

1. பொதுவான அங்கத்துவம்
2. ஜனநாயகக் கட்டுப்பாடு
3. முதலீடுகளிலிருந்து வரையறுக்கப்பட்ட வருவாய்
4. லாபத்தில் பங்கு
5. ரொக்கப் பணத்திற்கே விற்பனை செய்தல்
6, சந்தை விலைக்கு விற்பனை
7. அங்கத்தினர்களுக்கு கூட்டுறவின் நலன்பற்றி விளக்கும் கல்விமுறை
8. அரசியலிலும், சமயத்திலும் கோஷ்டி சேராது கண்டிப்பான நடுநிலையைப் பின்பற்றுதல்.

### பொதுவான அங்கத்துவம்

கூட்டுறவு நிறுவனத்தின் சேவைகளையும், வசதிகளையும், சாதி சமய இன—பண சமூகவேறுபாடின்றி சகலருக்கும் அங்கத்துவமளித்தல். நிருவாக வசதிக்காக ஒவ்வொரு கூட்டுறவின் எல்லையை நிர்ணயம்செய்து கொள்ளுதல்.

### ஜனநாயகக் கட்டுப்பாடு

கூட்டுறவுச் சங்கங்கள் எந்த மக்களுக்குச் சேவையாற்றுகின்றனவோ அந்த மக்கள் சங்கங்களின் நிருவாகத்தைக் கட்டுப்படுத்தல். இக்கட்டுப்பாட்டு முறை ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் நடைபெறும்.

கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள் வழக்கமான கால எல்லையில் கூடி கூட்டுறவுச் சங்கங்களின் கொள்கைகள் நடைமுறைகளையும் தீர்மானித்துக் கொள்வர். இத்தகைய கூட்டங்களில் அங்கத்தவர்களின் முதலீட்டுப் பாகுபாடின்றி சகலருக்

கும் சம வாக்குரிமையே அளிக்கப்படும். இந்த நடைமுறை கூட்டுறவுச் சங்கங்கள் தனிப்பட்ட அல்லது சிறு குழுவினரின் ஆதிக்கத்தைத் தவிர்த்து சமூக நலன் கருதி செயற்பட உதவுகிறது.

**முதலீடுகளிலிருந்து வரையறுக்கப்பட்ட வருவாய்**

மற்றைய வர்த்தகங்களைப் போல் கூட்டுறவுச் சங்கங்களும் சீராக இயங்கப் பணம் தேவைப்படுகிறது. இப்பணங்களுக்கான வட்டி விகிதம் சட்டத்தின் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றிகரமாக இயங்கப் போதுமான மூலதனத்தை ஈர்க்கக்கூடிய முறையில் இந்த வட்டி விகிதங்கள் வழங்கப்படுகிறது. அத்துடன் தனி நபர் வைத்திருக்கக் கூடிய அதிகபட்ச பங்கு எவ்வளவு என்பதும் சட்டப்படி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களின் கொள்கைகளை நிர்ணயிப்பதில் தனி நபர் அல்லது சிறு குழுவினரின் ஆதிக்கம் ஏற்படாமல் தவிர்க்கவே இந்த வரையறுப்பு செய்யப்பட்டுள்ளது.

**லாபத்தில் பங்கு**

செலவுகள் போக மேலதிகமாகக் கிடைக்கும் வருவாயை, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்குபற்றுதலுக்கேற்ப பகிர்ந்து கொடுப்பது கூட்டுறவு அடிப்படைத் தத்துவத்தில் ஒன்றுகும். இது கூட்டுறவின் மிக முக்கிய சிறப்பு அம்சமாகக் கணிக்கப்படுகிறது.

ஒரு கூட்டுறவுச் சங்கம் லாபத்தைச் சம்பாதிப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல. அதன் உறுப்பினர்களுக்குச் சேவையாற்றுவதையும் அது நோக்கமாகக் கொண்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் சம்பாதிக்கும் லாபம் அனைத்தும் அதன் அங்கத்தவர்கள் எந்த அளவுக்குக் கூட்டுறவுச் சங்கத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்கள் பயனடைகிறார்கள். குறைந்த விலைக்குப் பொருட்களைப் பெறுகிறார்கள். இதனை ஒரு வகையில் செல்வத்தைச் சமமாகப் பங்கிடுதல் என்றும் கூறலாம்.

**ரொக்க விற்பனை**

சங்கத்தின் மூலதனம் விரயமாகிவிடாமல் இருக்க இந்தக் கொள்கை கையாளப்படுகிறது. கடன் வசதிகளை நீடிப்பதால் மூலதனம் விரயமாகி சங்கத்திற்கு பொருளாதார நெருக்கடி தோன்றக் கூடும். இந்நிலையைத் தவிர்க்கவும், சகலருக்கும் சம வாய்ப்பு அளிக்கவுமே 'ரொக்க விற்பனை' முறை கையாளப்படுகிறது.

**சந்தை விலைக்கு விற்பனை**

கூட்டுறவுச் சங்கங்கள் மார்க்கெட்டில் இருக்கும் விலைக்கே தனது பொருட்களை விற்பனை செய்வதுடன், இதர சேவைகளையும் ஆற்றி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் அடையும் லாபங்கள் பின்னர் அங்கத்தவர்களின் பயன்படுத்தலுக்கு அமைய விகிதாசாரப்படி பிரித்துக் கொடுக்கப்படுவதால், உண்மையில் அவர்கள் கொள்முதல் விலைக்கே பொருட்களைப் பெறுகிறார்கள். மார்க்கெட்டில் விற்கப்படும் விலையைவிடக் குறைந்த விலைக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது பொருட்களை

விற்பனை செய்ய முன்வந்தால், தனிப்பட்ட வர்த்தக தாபனங்களின் கடுமையான எதிர்ப்பையும் போட்டியையும் சமாளிக்க வேண்டி வரும். இதனால் கூட்டுறவு முயற்சி பாழ்பட்டுவிடும் ஆபத்து ஏற்படும். மார்க்கெட்டில் பொருட்களின் விலை வேண்டுமென்றே அதிகரிக்கப்பட்டிருப்பதை உணரும்போது கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்வதுண்டு. அனாவசிய முறையில் விலைகள் தனியார் துறையினரால் அதிகரிக்கப்படுவதைக கட்டுப்படுத்தவே கூட்டுறவுச் சங்கங்கள் இந்த நடவடிக்கையை மேற்கொள்கின்றன. விலைகள் நியாயமான விலைக்கு வீழ்ச்சியடைந்த பின்னர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது பொருட்களையும் அதே விலைக்கு விற்பனை செய்ய ஆரம்பிக்கும். இதன் மூலம் அவசர நேரத்தில் பொருட்களின் அனாவசிய விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் ஒரு மார்க்கமாக கூட்டுறவு இயக்கங்கள் விளங்குகின்றன.

### அங்கத்தவர்களுக்கு கூட்டுறவின் நலன்பற்றி விளக்குதல்

கூட்டுறவுச் சங்கங்கள் தனது அங்கத்தவர்களிடமும், அங்கத்தவர்களல்லாதவர்களிடமும், கூட்டுறவின் இலட்சியங்கள் பற்றியும், அதன் நடைமுறைகள் பற்றியும் திட்டமிட்ட முறையில் விளக்கவேண்டும். கூட்டுறவின் கொள்கைகளை ஒழுங்காக அங்கத்தவர்களுக்கு விளக்கும் வகையில் — அவர்கள் சரியான கொள்கைகளை வகுத்துக் கொள்ளும் வகையில் — அவர்களுக்குச் சரியான தகவல்களை அளிக்கவேண்டும். கூட்டுறவின் இலட்சியங்களையும் தத்துவார்த்தங்களையும் மற்றவர்களுக்கு விளக்கும் நோக்கத்துடன் கல்வி முறையை வகுக்கவேண்டும். கூட்டுறவுச் சங்கத்தின் வருவாயில் ஒரு பகுதியை இத்தகைய பிரசாரத்திற்கென ஒதுக்க வேண்டும்.

### மாறாத நடுநிலை

சமய சம்பந்தமான — அரசியல் ரீதியான சகல விஷயங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் கண்டிப்பான நடுநிலையைப் பின்பற்ற வேண்டும். அங்கத்தவர்களின் அரசியல் — சமய அபிப்பிராயங்கள் சங்கத்தின் கொள்கை — இலட்சியங்களில் ஊடுருவாமல் கண்டிப்பாக அவதானிக்கவேண்டும்.

## பொருளாதார சமூக நலன்கள்

பொருளாதார — சமூகக் காரணங்களாலேயே மக்கள் கூட்டுறவில் பங்கு கொள்கின்றனர். தங்களது பொருளாதாரத்தை அளவான அடிப்படையில் சேமிப்பதும், மனிதாபிமான அடிப்படையில் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதுமே அந்த முக்கிய காரணங்களாக அமைகின்றன. மக்களின் இந்த அவா கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே நடைமுறைச் சாத்தியமாகிறது.

### பொருளாதார நலன்கள்

1. கூட்டுறவுச் சேவையில் லாபம் பெறுவதே இறுதி இலட்சியமாக இருத்தலாகாது. மனிதத் தேவைகளுக்கே முக்கியமான முதலிடமளிக்கவேண்டும்.
2. கூட்டுறவு இயக்கங்கள், செல்வத்தை சமமாகப் பங்

கிடும் நிறுவனங்கள் என்றும் கூறலாம். ஏனெனில் கூட்டுறவைப் பயன்படுத்துபவர்களுக்கே கூட்டுறவின் மூலம் கிடைக்கும் லாபம் பங்கிடப்படுகிறது.

3. பொதுமக்களைச் சுரண்டும் ஏகபோக உரிமைகளைத் தடுத்து மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதில் கூட்டுறவுகள் முதன்மை வகிக்கின்றன. எந்தத் துறையில் பலம் வாய்ந்த கூட்டுறவு இருக்கிறதோ, அந்தத் துறையில் மக்களைச் சுரண்டும் தன்மை குறைந்து விடுகிறது.

4. கூட்டுறவுகள் உற்பத்தியாளர்களின் விலை பொருட்களுக்கு நியாயவிலைகளைக் கொடுப்பதுடன், பாவனையாளர்களுக்கு அவற்றை குறைந்த விலைக்கு விற்பனை செய்கின்றது.

5. கூட்டுறவுச் சங்கங்கள் சாதாரண நபர்களுக்குகூட பெரிய வர்க்கத்தில் ஈடுபட வாய்ப்பையும், பொருளாதார வசதியையும் அளிக்கின்றன.

சமூக நலன்கள்

1. கூட்டுறவு என்பது 'கூடி வேலை செய்தல்' என்பதை அடிப்படையாகக் கொண்டது. இதனால் பல்வேறு தொடர்புகள் ஏற்படுகின்றன. இதன் மூலம் அயலவர்களுக்கு உதவவும், அவர்கள் வேலைகளில் பங்கு கொள்ளவும் மக்கள் பழகிக் கொள்கின்றனர். பலரின் ஏகோபித்த ஒத்துழைப்புக்கு வழி செய்கிறது.

2. கூட்டுறவுகளின் மூலமாக மக்கள் தங்களுக்கு வேண்டியதைத் தாங்களே செய்து கொள்கின்றனர். தன் கையே தனக்குதவி என்ற தத்துவத்தை அவர்களே நடைமுறையில் அனுஷ்டிக்கின்றனர்.

3. கூட்டுறவு தேசிய – சர்வதேசிய சமாதானத்தை வளர்க்கிறது. பொருளாதாரக்காரணங்களையே அடிப்படையாகக் கொண்ட உள்நாட்டு அமைதியின்மையையும், யுத்தத்தையும் அன்றி, மனிதர்களையும், நாடுகளையும் கூட்டு முயற்சிக்குப் பழக்குகின்றது.

4, சமூகத்தினதும், அயலவர்களினதும் – கஷ்ட – நஷ்டங்களை தனி மனிதனுக்கு உணர்த்தி அவனது செயலையும், சிந்தனையையும் கூட்டுறவு பூரணப்படுத்துகிறது.

5. கூட்டுறவு, சுதந்திர வர்த்தக உரிமையைப் பாதுகாக்கிறது. கூட்டுறவில் நிர்ப்பந்தம் எதுவும் கிடையாது.

## கூட்டுறவுச் சங்கங்களை வகைப்படுத்தல்

கூட்டுறவுச் சங்கங்களில் பல்வேறு வகைகள் உண்டு. இவற்றை எவ்வாறு வகைப்படுத்துவது என்பதை முதலில் கவனிப்போம். ஒரு கூட்டுறவுச் சங்கத்தை வகைப்படுத்துவதற்காக நாம் மூன்று முக்கிய கேள்விகளுக்கு விடை காணவேண்டும்.

1. சங்கத்தின் நோக்கமென்ன?
2. அது யாருக்குச் சொந்தமானது, யார் அதை நடத்துகிறார்கள்?

3. யாருடைய நலனுக்காக அது நடத்தப்படுகிறது?

உதாரணத்திற்கு வீடு கட்டும் கூட்டுறவு ஒன்றை எடுத்துக்கொள்வோம். இக்கூட்டுறவின் நோக்கமென்ன? வீடுகளைக் கட்டுவதுதான்! இப்போது மூன்றாவது கேள்வியை ஆராய்வோம். அது யாருடைய நலனுக்காக? இக்கேள்விகளுக்கு மூன்று முக்கிய பதில்கள் உண்டு.

(அ) தங்களுக்கு வீடு கட்டிக் கொள்ள வேண்டுமென எண்ணுவோருக்கு.

(ஆ) வீடு கட்டுவதற்காக பணம் கடன் வாங்க விரும்புவோருக்காக.

(இ) ஒப்பந்த முறையில் வீடுகளைக் கட்ட முன்வரும் கட்டிடத் தொழிலாளர்களுக்காக.

மேற்கண்டவாறு இரண்டாவது கேள்விக்குரிய பதிலையும் ஆராய்வோம். கூட்டுறவு யாருக்குச் சொந்தமானது? அதனை யார் நடத்துகிறார்கள்?

(அ) வீடுகளில் குடியிருக்கும் அங்கத்தவர்களுக்கு, அதாவது பாவனையாளர் சங்கத்திற்கு அது சொந்தமானதாகும்.

(ஆ) கடனுதவிச் சங்க அங்கத்தவர்களாக இருக்கும் மக்கள்

(இ) தொழிலாளர்கள் உற்பத்திக் கூட்டுறவின் அங்கத்தவர்கள்.

மேற்கண்ட வகைப்படுத்தல் முறைமைக்கமைய நாம் இரண்டு பேக்கறிகளை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். இரண்டும் ஒரே வித தோற்றத்தையும் சாதனங்களையும் கொண்டதாக இருக்கும். இவ்விரண்டும் மக்களுக்கு ரொட்டி உற்பத்தி செய்வதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

முதலாவது பேக்கரி உள்ளூர் பாவனையாளர்களுக்கு சொந்தமானதாகும். பாவனையாளர்களினால் நடத்தப்படும் இந்த பேக்கரியின் நோக்கம் கூடுமானவரை குறைந்த விலையில் பாண் உற்பத்தி செய்வதுதான். இது ஒரு பாவனையாளர் சங்கமாகும்.

இரண்டாவது பேக்கரியை அதில் வேலை செய்யும் தொழிலாளர்களே நடத்துகிறார்கள். நல்ல சேவை முறைகளுக்கு அமைய பாண் தயாரிப்பாளருக்கு வேலை செய்து கொடுப்பதே இச்சங்கத்தின் நோக்கமாகும், தொழிலாளர்களுக்கே சொந்தமான இது ஒரு கைத்தொழில் உற்பத்திச் சங்கமாகும்.

மேலே கூறப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் குறித்து நாம் பின்வரும் முடிவுக்கு வரலாம். ஒரு கூட்டுறவுச் சங்கத்தை வகைப்படுத்த வேண்டுமெனில் அச் சங்கத்தின் தேவைகள் என்ன என்பதைப் பற்றித் தெளிவான முடிவுக்கு வரவேண்டும். தாங்கள் நடத்தும் சேவைகளிலிருந்தும் அங்கத்தவர்கள் என்ன பயனை எதிர்பார்க்கிறார்கள். அவர்களுக்கும் சங்கத்திற்கும் இடையிலான வர்த்தக உறவு என்ன என்பதையெல்லாம் நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

ஏற்கெனவேயுள்ள ஒரு சங்கத்தை ஆராயும்போது நாம் மேற்கண்ட முறையைப் பின்பற்ற வேண்டும். புதிதாக ஒரு சங்கத்தை நிறுவுவதெனில் அதனை நிறுவு முன்னர் நமது ஆராய்வு மிகவும் தீர்க்கமானதாகவும், தெளிவானதாகவும் இருக்க வேண்டும்.

| | தனியார் துறை | பங்கு கம்பெனிகள் | அரசாங்கம் | பொது கூட்டுறவுகள் | உற்பத்தியாளர் கூட்டுறவுகள் | கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்திற்கும் மற்றவைகளுக்கும் உள்ள வேறுபாடு |
|---|---|---|---|---|---|---|
| பணம் | □ | □ | □ | □ | □ | சொந்த முதலீடு |
| மனிதர் | ○ | ○ | ○ | ○ | ■ | சொந்த உழைப்பு |
| நிருவாகம் | □ | △ | ∠ | □ | ■ | சொந்த நிருவாகம் |

பங்குகள் வரையறுக்கப்பட்ட தொகையல்ல. கூட்டுறவுகளின் பொருளாதார பலத்தை அனுசரித்து அது நிர்ணயிக்கப்படும். அங்கத்தவர்களின் தொகைக்கேற்ப பங்குகளின் தொகை அமையும். ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு என்ற நியதிக்கொப்பநாம் எல்லோரும் கூட்டாக வாழ்வதற்கு இன்றியமையாததாக கூட்டுறவு அமைந்துவிட்டதென்று கருதுவது மிகையாகாது. நாட்டு மக்களும் நாட்டின் தேசிய நலனும் உயர்ந்து மக்கள் சுபீட்சமாக வாழ கூட்டுறவு அன்றாட வாழ்வில் இரண்டறக் கலக்க வேண்டும் என்பது அவசியமாகும்.

*[தேசீய கூட்டுறவுச் சபையின் கல்விப்பகுதி ஊழியர்களுக்காக ஸ்ரீலங்கா மன்றக் கல்லூரி தேசீய கூட்டுறவுச் சபையுடன் இணைந்து நடாத்திய ''வளர்ந்தோர் கல்வி முறைகளும் நுணுக்கங்களும்'' என்னும் கருத்தரங்கில் வாசிக்கப்பட்டது.]*

---

(14 ம் பக்கத் தொடர்ச்சி)

காலங்கடந்த எண்ணத்தை அது களைந்தெறிய வேண்டும். குறிப்பாக, வளர்ச்சி குன்றிய நாடுகளிலே அதன் இன்றைய பங்கு மிக முக்கியமானது. தேசீய அபிவிருத்திப்பணியில் அது அரசின் சுறுசுறுப்பான பங்காளி: இப்பணி ஆற்றப்படும்போது, கூட்டுறவு இயக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள வெவ்வேறு குழுக்களின் குறுகிய நலன்கள் தாமாகவே மேம்படும்,

(வளரும்)

(முற்றொடர்)

# பெரிய ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் மாதிரி நடைமுறைப் பிரமாணங்கள்

**21. பதில் ஊதியம் :**

தான் வகிக்கும் நிரந்தர பதவியுடன் ஒரு பணியாளர் :

அ. மேலான பதவியில் பதில் கடமை ஆற்றினுல் அல்லது

ஆ. எதிர்காலத்தில் நிரந்தரமாக நிரப்பப்படவிருக்கும் ஒரு பதவியில் முழு நேரம் கடமையாற்றினுல் அல்லது

இ. பதில் கடமையாற்றும் காலம் 2 மாதங்களுக்கு மேற்பட்டதாய் இருந்தால்

பின்வருமாறு பதில் சம்பளம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்படலாம்.

1. பதில் பதவி நிரந்தரப் பதவியைவிட மேலானதாய் இருந்து, நிரந்தர பதவிக்குரிய கடமைகளை அவர் செய்யாதிருத்தலுடன் அவருக்கு தற்பொழுது வழங்கப்படும்சம்பளம் பதில் பதவிக்கு உரிய வருடாந்த சம்பளத்தைப் பார்க்கிலும் குறைவானதாய் இல்லாவிட்டால், தற்போதைய சம்பளம் அவருக்கு வழங்கப்படலாம்.

2. தற்போதைய சம்பளம் பதில் பதவியின் தொடக்கச் சம்பளத்திலும் பார்க்கக் குறைவானதாய் இருந்தால், பதில் பதவியின் தொடக்கச் சம்பளத்தில் அரைவாசியும் நிரந்தரப் பதவிக்குரிய சம்பளத்தில் அரைவாசியும், நிரந்தரப் பதவிக்குரியதும் பெறப்பட்டது மான சம்பள ஏற்றங்களுடன், வழங்கப்படலாம்.

3. மேலான பதவியில் பதில் கடமையாற்றினுல், அவரது சம்பளம் பதில் பதவியின் தொடக்கச் சம்பளத்தில் பார்க்கிலும் கூடுதலாய் இருக்குமிடத்து நிரந்தரப் பதவிக்குரிய இன்னெரு சம்பள ஏற்றம் அல்லது நிரந்தரப் பதவிக்குரிய ஆகக்கூடுதலான சம்பளம்,

(எது குறைவானதோ) அவருக்கு வழங்கப்படலாம்.

**22. பிரயாண சீவனோபாய படிகள்**

அ. நெறியாளர் குழுவினர்க்கும், கிளைக்குழு உறுப்பினர்க்கும், வேறு சங்க அலுவலர்க்கும் வழங்கப்படும் பிரயாண, சீவனோபாயபடிகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, 1972 ஏப்ரல் 30ம் திகதி வெளியிடப்பட்ட கூட்டுறவு ஆக்க ஆணையாளரின் சுற்றறிக்கை இலக்கம் 12/9/73/102ற்கு அமைவாகப் பிரமாணங்கள் வரையப்படல் வேண்டும்.

**ஆ. பணியாளர்கள்:** சங்கத்தின் வியாபாரம் தொடர்பாக சங்கத்தின் தொழிற்பரப்பிற்கும் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளரின் பிரிவிற்கும் அப்பால் பிரயாணம் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கு, சீவனோபாய, தங்குதல் கொடுப்பனவுகள், ஒன்றாக இணைக்கப்பட்டு பின்வரும் அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்படலாம். 24 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஏதேனும் பகுதி நேரத்திற்கு—முழுக்கொடுப்பனவு; 18 மணித்தியாலங்களுக்குக் குறையாத ஏதேனும் பகுதி நேரத்திற்கு—முழுக்கொடுப்பனவு; 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத ஏதேனும் காலப் பகுதிக்கு—முழுக் கொடுப்பனவில் 2/3; 6 மணித்தியாலங்களுக்குக் குறையாத ஏதேனும் காலப்பகுதிக்கு—முழுக் கொடுப்பனவில் 1/3. பணியாளர்களின் வருடாந்தச் சம்பளத்திற்கு ஏற்ப பின்வரும் ஒன்றாக்கப்பட்ட தொகைகள் வழங்கப்படலாம்.

1. வருடாந்தச் சம்பளம் :

| | ஒவ்வொரு 24 மணித்தியாலங்களுக்கும் |
|---|---|
| ரூபா 2400/—க்கு குறைந்த தொகைக்கு | ரூபா 7/50 |
| ,, 2400/—க்கு மேற்பட்ட ,, | ,, 10/50 |
| ,, 3600/—க்கு ,, ,, | ,, 13/50 |
| ,, 4800/—க்கு ,, ,, | ,, 16/50 |
| ,, 6000/—க்கு ,, ,, | ,, 19/50 |

சங்கத்தின் வியாபாரம் தொடர்பாகத் தனது வேலைத்தலத்திற்கு அப்பால் சங்கத்தின் தொழிற்பரப்பினுள் 6 மணித்தியாலங்களுக்கு மேலான ஏதேனும் காலப்பகுதிக்கு வேலை செய்யும் ஒரு பணியாளர்—அவரது சம்பளம் எவ்வளவாக இருப்பினும்—ரூபா 2/- கொடுப்பனவுக்கு உரித்தானவர். இவ்வாறான காலப் பகுதிகளை அவர் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் பிரிவில் கழிக்குமிடத்து ரூபா 2/50 கொடுப்பனவுக்கு உரித்தானவர். மேலதிகமாகச் செலவிடப்படும் ஒவ்வொரு 6 மணித்தியாலங்களுக்கும், இதே அளவு தொகை வழங்கப்படலாம். சங்கத்தின் வியாபாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய பிரயாணங்களுக்குச் சங்க வாகனங்களைப் பயன்படுத்த முடியாதவிடத்து பொதுப் போக்கு வரத்துச் சேவை மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும்.

**23. கடன் வசதி கூட்டுறவு கிராமிய வங்கித்துறை:**

புதிய கூட்டுறவு கிராமிய வங்கி அமைப்புப்பற்றி மக்கள் வங்கி அனுப்பிய சுற்றறிக்கையுடன் இணைத்து வெளியிடப்பட்ட நடைமுறைப் பிரமாணங்கள் 1 தொடக்கம் 98 வரை கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

**24. முதலினையும் வேறு நிதி வளங்களையும் பெறல்:**

சங்கத்தின் இயக்கத்திற்கு வேண்டிய முதலை அதனகத்தே பெற முடியாதவிடத்து, சங்கம், உச்ச கடன் எல்லைக்கு அமைவாக, வங்கிகள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், தனியார் துறை ஆகிய வெளி நிறுவனங்களிலிருந்து தனக்கு வேண்டிய நிதியைக் காசாகவோ, பொருளாகவோ—எது பொருத்தமோ—பெறலாம். ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இத்தகைய நிதிகள் உரிய திகதியில் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும்.

**25. பணவரவு செலவுத் திட்டமும் உச்சக் கடன் எல்லையும்:**

சங்கத்தின் உச்சக் கடன் எல்லையை நிர்ணயிக்கும் பொருட்டு அடுத்த ஆண்டிற்கான பணவரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். பின்வருவனவற்றைக் கவனத்திற் கொண்டு மாதாந்த அடிப்படையில் அது தயாரிக்கப்படல் வேண்டும்.

1. மூலதனச் செலவுகள் திரும்பத் திரும்ப ஏற்படும் செலவினங்கள் கடன்பாடுகளைத் தீர்த்தல்.

2. வெவ்வேறு முயற்சிகள் மூலமும், ஒதுக்கு மூலதனம், நன்கொடைகள் மூலமும் பெறப்படும் வருமானங்கள்.

3. சுத்தக் குறைவரவும், ஆண்டுத் தொடக்கத்தில் திருப்பிக் கொடுக்கப்படாதிருக்கும் நிலுவையும் உச்சக் கடன் எல்லையாக கருதப்படல் வேண்டும். இவ்வுச்சக்கடன் எல்லை பொதுக் கூட்டத்திலுல் தீர்மானிக்கப்பட்டு கூ. உ. ஆ. ஆணையாளரினுல் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

26. காசுக் கட்டுப்பாடு: வருடாந்தத் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்:

அ. நெறியாளர் குழுவினுல் அங்கீகரிக்கப்பட்ட பொது முகாமையாளரின் வருடாந்தத் திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு வருடாந்த வரவு செலவுத் திட்டம், அடுத்துவரும் நிதி ஆண்டிற்குக் குறைந்தது 2 மாதங்களுக்கு முன்னராவது, ஒவ்வொரு துறையையும் சேர்ந்த நிறைவேற்றுத் துறை உத்தியோகத்தர்களின் உதவியுடன் கணக்காளரினுல் தயாரிக்கப்பட்டு பொது முகாமையாளரின் ஊடாக நெறியாளர் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஆ. நெறியாளர் குழுவின் அங்கீகாரத்துடன்இவ் வரவு செலவுத் திட்டம் சங்கத்தின் பொதுக் கூட்டத்திற்கு, அதன் ஏற்பிசைவிற்காகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பொதுக் கூட்டத்திலுல் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் செயற்படுத்தப்படும் பொருட்டு சங்கத்தின் வெவ்வேறு துறைகளுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

27. கொடுப்பனவுகள் :

அ. பெட்டிக்காசு, கூட்டுறவுக் கிராமிய வங்கி மூலமும் நெறியாளர் குழு நிர்ணயித்த உச்ச எல்லைக்கு அமைவாக கொள்வனவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருள்களுக்கும், உத்தரவாத விலைத்திட்ட விளை பொருள்களுக்கும் வழங்கப்பட்ட கொடுப்பனவுகளைத் தவிர்த்து, எல்லாக்கொடுப்பனவுகளும் காசோலைகள் மூலம் செய்யப்படல் வேண்டும்.

ஆ. அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களுக்கு அமைவாகவே எல்லாக் கட்டுப்பாடுகளும் கொடுப்பனவுகளும் இருத்தல் வேண்டும். செலவினத் தலைப்புப் பேரேடு ஒன்று வைக்கப்படல் வேண்டும். அங்கீகாரம் வழங்கும்போது அங்கிகரிக்கும் அதிகாரி அது பேரேட்டில் பதியப்படுவதற்கு ஏதுவாய் இருப்பதுடன், பேரேட்டில் தனது கையொப்பத்தின் தலைப்பு எழுத்துக்களை இட்டு அதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். ஒரு கொடுப்பனவிலிருந்து அடுத்த கொடுப்பனவுவரை செலவினத் தலைப்புப் பேரேடு சமன்படுத்தப்படல் வேண்டும்.

இ. அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களுக்கு மேலதிகமாக எக்கொடுப்பனவும் அங்கீகரிக்கப் படலாகாது. எதிர்பாராத சூழ்நிலைகளால் அங்கீகரிக்கப்பட்ட செலவினத் தலைப்புக்கள் தீர்ந்து விட்டால், குறை நிரப்பு மதிப்பீடுகள் நேரகாலத்தோடு பொதுக் கூட்டத்தினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

ஈ. இப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கொடுப்பனவுகள் அவ்வப் பணியாளர்களினால் வழங்கப்படும் போது பின்வரும் நடைமுறை கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

1. உறுதிச் சீட்டைத் தயாரித்தல்
2. கணக்குகளைச் சரிபார்த்தல்
3. உறுதிச் சீட்டை உறுதிப்படுத்துதல்
4. கொடுப்பனவுக்கு அதிகாரம் வழங்குதல்

**1. உறுதிச் சீட்டைத் தயாரித்தல் :**

எல்லாக் கொள்வனவுகள் தொடர்பாக இது கொள்வனவு உத்தியோகத்தர்களாலும், பொருத்தமான துறைகளைச் சேர்ந்த இவ்விடயத்திற்குப் பொறுப்பான எழுது வினைஞர்களாலும் தொடங்கப்படல் வேண்டும். படிவம் 16 (அ வும், ஆ வும்) நிரப்பப்பட்ட பின்னரே கொள்வனவுகள் குறித்து உறுதிச் சீட்டு தயாரிக்கப்படல் வேண்டும்.

**2. கணக்குகளைச் சரிபார்த்தல் :**

உள்துறை கணக்குப் பரிசோதனைப் பகுதி அல்லது, பொருத்தமான கணக்கு எழுதுநர் ஒருவர் உறுதிச்சீட்டுக்களைக் கணக்கு ரீதியாகச் சரிபிழை

பார்ப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட வீதங்களுக்கு அவை அமைவாக இருப்பதை உறுதிப்படுத்தி கையொப்பமிடல் வேண்டும்.

**3. கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தல் :**

துறைத் தலைவர்கள் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**4. கொடுப்பனவுகளுக்கு அதிகாரம் வழங்குதல்.**

இப்பிரமாணங்களுக்கும் நடைமுறைகளுக்கும் அமைவாக கொடுப்பனவு இருக்குமிடத்தும், அங்கீகரிக்கப்பட்ட செலவினத் தலைப்பில் நிதிகள் இருக்குமிடத்தும் மட்டுமே காசோலைகளுக்குக் கையொப்பமிட அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பொதுமுகாமையாளர் கொடுப்பனவுகளுக்கு அங்கீகாரம் அளித்தல் வேண்டும்.

**5.** உறுதிச்சீட்டு நிரப்பப்பட்டு முறையே உறுதிப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு கிடைக்கப்பெற்றதுமே காசோலை எழுதப்படல் வேண்டும். எப்பொழுதும் காசோலைகள் கோடிடப்பட்டு "மாற்றமுடியாதது" அல்லது "வங்கிக் கணக்குள்ளவர் மட்டுமே" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஆதார ஆவணங்களிலும் உறுதிச் சீட்டிலும் காசோலை வழங்கப்படு முன்னர், "செலுத்தப்பட்டுவிட்டது" என்று ரப்பர் முத்திரையால் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உ. விற்பனைப் பொருள்களைக் கொள்வனவு செய்தல் அல்லது உத்தரவாத விலைத்திட்ட விளைபொருள்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குதல் தவிர்த்து அத்தகைய வழங்கீடுகள் அல்லது சேவைகளுக்காக முன்னர் கோரப்பட்ட விலைப்புள்ளிகளை அல்லது கேள்விமுறை ஒப்பந்தங்களை ஆராய்ந்து நெறியாளர் குழுவினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால் மட்டுமே ரூபா 300/-க்கு மேற்பட்ட செலவுகள் செய்யப்படல் வேண்டும். இதற்கு மேற்படாத தொகை கொடுப்பனவுகளுக்கு வேண்டிய அங்கீகாரத்தை தலைவர் அல்லது பொதுமுகாமையாளர் வழங்கலாம்.

**ஊ. கேள்விமுறை ஒப்பந்தச் சபை :**

கேள்விமுறை ஒப்பந்தச் சபை பின்வருமாறு 5 உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தவிசாளர் :
1. சங்கத்தலைவர்
2. உறுப்பினர்கள் :
சங்க உபதலைவர்
3. பொதுமுகாமையாளர்
4. குறிப்பிட்ட பொருள் தேவைப்படும் அல்லது அதனை விற்பனை செய்யும் துறையின் தலைவர்
5. கணக்காளர்

கூட்டக்குறிப்புக்கள் யாவும் வைக்கப்பட்டிருப்பதற்கு கேள்விமுறை ஒப்பந்தச் சபை ஏதுவாய் இருத்தல் வேண்டும்.

**2. கேள்வி முறை ஒப்பந்த நடைமுறை :**

தேர்ந்தெடுப்பு கேள்வி முறை ஒப்பந்தங்களைத் தவிர, பொதுவாக சகல கேள்விமுறை ஒப்பந்தங்களையும் பொது மக்கள் பார்வையிடலாம். குற்றம் புரிந்த வியாபார நிறுவனங்களினதும் ஆட்களினதும் கரும பட்டியல் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இத்தகைய நிறுவனங்கள் அல்லது ஆட்களிடமிருந்து விலைப்புள்ளிகள் அல்லது கேள்விமுறை ஒப்பந்தம் கோரப்படவோ அல்லது ஏற்கப்படவோ ஆகாது.

3 எல்லாக் கேள்விமுறை ஒப்பந்தங்களும் இரண்டு பிரதிகளாக முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் ''தவிசாளர் கேள்வி முறை ஒப்பந்தச் சபை'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''...........க்கான கேள்வி முறை ஒப்பந்தம்'' என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். பதிவுத்தபாலில் பெறப்படும் அல்லது நேரடியாகக் கையால் கொடுக்கப்படும் கேள்வி முறை ஒப்பந்தங்கள் கேள்வி முறை ஒப்பந்தச் சபைத் தவிசாளரின் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடப்படல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்வி முறை ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படலாகா.

**4. கேள்விமுறை ஒப்பந்தங்களைத் திறத்தல்**

கிடைக்கப்பெற்ற கேள்வி முறை ஒப்பந்தங்கள்யாவும் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு திகதிபொறிக்கப்படல் வேண்டும். கேள்வி முறை ஒப்பந்தச்சபை உறுப்பினர் ஒருவரின் தலைமையில் இக்கேள்விமுறை ஒப்பந்தங்கள் திறக்கப்படல் வேண்டும் அவற்றில் அவர் தனது கையொப்பத்தின் தலைப்பெழுத்துக்களை பொறித்தல் வேண்டும். இவற்றிக்குத் தொடர் இலக்கங்கள் வழுங்கப்படல் வேண்டும். ஒவ்வொரு கேள்விமுறை ஒப்பந்தத்தின் மூலத்திற்கும் பிரதிக்கும் ஒரே இலக்கம் கொடுக்கப்படல் வேண்டும். ஒப்பந்தத்தின் பிரதி வேறுக்கப்படுவதோடு, இரண்டு பிரதிகளாக வைக்கப்படும் பட்

டியலில் குறிக்கப்படல்வேண்டும். கேள்விமுறை ஒப்பந்தங்களின் பிரதிகளும் பட்டியலின் பிரதியும் முத்திரை பொறிக்கப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்படல்வேண்டும். தலைமை வகிப்பவர் ஒவ்வொரு கேள்விமுறை ஒப்பந்தத்தின் வீதங்களையும் வேறு விசேட நிபந்தனைகளையும் வாசித்துக் காட்டுதல் வேண்டும். கேள்விமுறை ஒப்பந்த நிபந்தனைகளுக்கு அமைவாக இல்லாத சகல கேள்விமுறை ஒப்பந்தங்களும் இக்கட்டத்தில் நிராகரிக்கப்படல் வேண்டும். கேள்விமுறை ஒப்பந்தங்கள் வாசிக்கப்படும்போது ஒப்பந்தக்காரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் மேலேகுறிக்கப்பட்டுள்ள கேள்விமுறை ஒப்பந்தகாரர் பட்டியலின் மூலப்பிரதியில் கையொப்பமிடும்படி கோரப்படல் வேண்டும். தலைமைவகிப்பவர் இதில் உறுதிக்கையொப்பமிடல் வேண்டும்.

## 5. அட்டவணைப்படுத்தல்

இதற்குப்பின்னர் கேள்விமுறை ஒப்பந்தங்களின் மூலப்பிரதிகள் சரிபார்க்கப்பட்டு தொடர் இலக்கப்படி அட்டவணைப்படுத்தப்படல் வேண்டும்,

## 6. தகுதிவாய்ந்தவர்களின் அபிப்பிராயம்

அடுத்ததாக, தகுதி வாய்ந்தவர்களின் கருத்துக்களையும் அபிப்பிராயத்தையும் அறியும் பொருட்டு கேள்விமுறை ஒப்பந்தங்கள் அவர்களிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

## 7. ஒப்பந்தத்தை வழங்குதல்

இக்கருத்துக்களும் அபிப்பிராயங்களும் கிடைக்கப்பெற்றதும், கேள்விமுறை ஒப்பந்த அட்டவணைகளுடன் அவை கேள்விமுறை ஒப்பந்தச் சபையின் கவனத்திற்கு விடப்படல் வேண்டும். இச்சபை தனது தகவுரைகளை நெறியாளர் குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இத்தகவுரைகளின் அடிப்படையில் நெறியாளர்குழு ஒப்பந்தத்தை வழங்கும். தகவுரைகளுக்கு முரணாக ஒப்பந்தம் வழங்கப்படுமிடத்து அதற்குப் போதிய ஆதாரங்கள் காட்டப்படல் வேண்டும்.

## 8. ஒப்பந்தக்காரரின் தகைமை

மதிப்பிடப்பட்ட செலவில் 75 வீதத்திற்குக் குறையாது கட்டிட அல்லது கல்வி அல்லது நீர்ப்பாசன திணைக்களங்களில் பதியப்பட்ட ஒப்பந்தகாரரும் கட்டிடக்கலைஞர்களால் தகவுரை செய்யப்பட்ட வேறு பெயர் பெற்ற ஒப்பந்தக்காரரும் மட்டுமே ரூபா 10,000/– மேற்பட்ட மதிப்பீடுகளுக்குப் பொருந்துவதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

## 9. கேள்விமுறை ஒப்பந்தகாரரின் உரிமை

கேள்விமுறை ஒப்பந்தகாரர் சகலரும் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்போது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும். ஒப்பந்தத்தைத் திறக்கும் உத்தியோகத்தர் சமுகமளித்திருக்கும் ஒப்பந்தகாரருக்கு ஒவ்வொரு ஒப்பந்தம் தொடர்பான பெயரையும் விபரங்களையும் வாசித்துக் காட்டுதல் வேண்டும்.

**10 விளம்பரம்**

தடையற்ற கேள்விமுறை ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை பத்திரிகைகள் மூலம் பரந்துபட்ட விளம்பரம் அவற்றிற்குக் கொடுக்கப்படல் வேண்டும்.

**11. கேள்விமுறை ஒப்பந்த பிணைப்பணம்**

கேள்விமுறை ஒப்பந்த தொகுதி படிவம் ஒன்றிற்கு ஒப்பந்தகாரர் ஒவ்வொருவரும் ரூபா 250/- பிணைப்பணமாகக் கொடுத்தல் வேண்டும். ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர், இத்தொகையில் 225/- ஒப்பந்தக்காரர் ஒவ்வொருவருக்கும் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும்.

**12. பாதுகாப்புப் பிணைப்பணம்**

ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து பாதுகாப்புப் பிணைப்பணம் பெறப்படல் வேண்டும். ஒரு சேவை அல்லது ஒரு பொருளை வழங்குவதற்கான கேள்விமுறை ஒப்பந்தமாயின் அச்சேவை அல்லது அப்பொருளின் பெறுமதியில் 5 வீதம் பாதுகாப்புப் பிணைப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும். சங்கத்திடமிருந்து கொள்வனவு செய்யப்படும் ஒரு பொருள் தொடர்பாக ஒப்பந்தம் வழங்கப்படுமாயின் அப்பொருளின் பெறுமதியில் 50 வீதம் பாதுகாப்புப் பிணைப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

**28. அலுவலகப் பெட்டிக்காசு**

தனது ஏனைய கடமைகளுடன் அலுவலக பெட்டிக்காசாளராகக் கடமையாற்றுவதற்கு ஓர் அலுவலகப் பணியாளரை நெறியாளர் குழு நியமித்தல் வேண்டும். இப்பிரமாணங்களுக்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்ட ரூபா.........க்கு மேற்படாத தொகைகளை அவர் செலுத்தலாம். அவரது பெட்டிக்காசு உச்சத் தொகை ரூபா .........க்கு மேற்படாதிருத்தல் வேண்டும். பொருத்தமான படிவங்களில் அவரது கொடுப்பனவுகள் பதிவு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட உறுதிச்சீட்டுகளுடன் அவை கணக்குப் பரிசோதனைக்காக உள்துறைக் கணக்காய்வாளருக்கு அல்லது பொருத்தமான எழுதுநர்க்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களின் அளவுக்கு மட்டுமே அவருக்கு காசோலைமூலம் செலவழிக்கப்பட்ட பெட்டிக்காசு திருப்பிக்கொடுக்கப்படல் வேண்டும்.

**29. பெட்டிக்காசு-மொத்த சில்லறை நிலையங்கள்**

சில்லறைக் கொடுப்பனவுகளைச் செலுத்தும் பொருட்டு கிளை முகாமையாளர்கள் ரூபா .........க்கு மேற்படாத பெட்டிக்காசு உச்சத் தொகையை வைத்திருக்க அனுமதிப்பதற்கு பொதுமுகாமையாளருக்கு அதிகாரமுண்டு.

**30. கொள்வனவு முற்பணங்கள்.**

காலத்திற்குக் காலம் நெறியாளர் குழு அங்கீகரிக்கும் தொகைக்கு மேற்படாது கொள்வனவு உத்தியோகத்தர்களுக்குக் கொள்வனவு முற்பணம் கொடுக்கப்படலாம். அவரது

பெயருக்கும் பதவிக்கும் எழுதப்பட்ட காசோலைகள் மூலம் மட்டுமே இத்தகைய முற்பணங்கள் கொடுக்கப்படல் வேண்டும். எல்லாக் கொள்வனவுகளும் செய்து முடித்த அடுத்த நாள் அவர் தனது கணக்குகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் முற்பணங்களைத் தீர்த்து விடல் வேண்டும்.

## 31. பற்றுச் சீட்டுகள்

அ. காசு, காசோலைகள், பணக் கட்டளைகள், அஞ்சல்கட்டளைகள், சிட்டைகள் ஆகிய யாவற்றையும் காசாளர் பெற்று தொடர் இலக்கங்கள் கொண்ட புத்தகத்திலிருந்து பற்றுச்சீட்டுக்களை வழங்குதல் வேண்டும்.

ஆ. அஞ்சல்மூலம் கிடைக்கப்பெறும் சகல காசு ஆவணங்களிலும் பொதுமுகாமையாளர் ''வங்கிக்கணக்கு உள்ளவருக்கு மட்டும் வரவு வைக்குக'' என்ற வாசகத்தை றப்பர் முத்திரையால் பொறித்தல் வேண்டும். இத்தகைய எல்லா ஆவணங்களும் ஒரு பதிவேட்டில் பதியப்பட்டுக் காசாளருக்குக் கையளிக்கப்படுவதுடன் அவர் அவற்றினைப் பெற்றதற்கு அத்தாட்சியாக அவரது கையொப்பம் பெறப்படல் வேண்டும். சங்கத்தின் ஏதேனும் துறையின் மூலம் பெறப்படும் வருமானத்திற்கு தொடர் இலக்கம் கொண்ட பற்றுச்சீட்டு வழங்கப்படல் வேண்டும். ஒவ்வொரு நாளும் வியாபாரம் முடிவடைந்ததும், காசு நிலைமை படிவம் 11இல் பதியப்பட்டு பொது முகாமையாளரினால் பார்வையிடப்பட்டதும் இரும்புப் பெட்டியில் வைக்கப்படல் வேண்டும்.

இ. இரும்புப் பெட்டியில் உள்ள காசும், கொண்டு செல்லப்படும் காசும் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ஈ. பணியாளரின் முழுப்பொறுப்பில் வாடிக்கையாளரிடமிருந்து கொடுக்கல் வாங்கல்களுக்கு மேற்படாத தொகைக்கு காசோலைகள் மூலம் கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்படலாம். எனினும் தனிப்பட்டவர்களின் காசோலைகளைச் சங்கம் மாற்றிக் கொடுக்கலாகாது.

உ. அரசாங்க திணைக்களங்களாலும் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாலும் எழுதப்பட்ட காசோலைகள் பணியாளரின் பொறுப்பில் மாற்றிக் கொடுக்கப்படலாம்.

ஊ. வங்கி ஏற்பாடு செய்துள்ள ஒழுங்குக்கு மேலாக எழுதப்பட்டுள்ள காசோலைகளினால் சங்கத்திற்கு ஏற்படும் செலவுகளையும், நட்டங்களையும் பொதுமுகாமையாளர் ஈடுசெய்தல் வேண்டும்.

எ. ஒவ்வொரு காசோலையும் எழுதப்பட்டதும் அது குறித்து படிவம் 8இல் பதிசெய்யப்பட்டதற்குஎதிராக பொது முகாமையாளர் கையொப்பமிடல்வேண்டும்.

ஏ. அரசாங்கத்தால் அல்லது ஒரு வங்கியால் வழங்கப்

படும் வள ஆதாரங்கள் குறிக்கப்பட்ட நோக்கத்திற்காக மட்டுமே பயன் படுத்தப்படல் வேண்டும்.

ஐ. தினந்தோறும் அல்லது வாரம் தோறும் வங்கிக் கூற்றினைப் பெற முடியாத விடத்து ஆகக்குறைந்தது மாதந்தோறுமாவது அது பெறப்படல் வேண்டும். கணக்கில் சேர்க்கப்படாத தொகை குறித்து வங்கி ஒப்புரவுக் கணக்கு தயாரிக்கப்பட்டு அடுத்த மாதம் 5ம் திகதிக்கு முன்னர் கணக்காளரினால் பொது முகாமையாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

## 32. நுகர்வுப் பகுதி

அ. நுகர்வுப்பகுதியை நிருவகிப்பதற்கு ஓர் ஆலோசனை உபகுழு பின்வருமாறு அமைக்கப்படல் வேண்டும்.

1. தலைவர் 2. பொதுமுகாமையாளர் 3. கணக்குப்பதிவாளர் 4. கொள்வனவு உத்தியோகத்தர்களில் ஒருவர் 5. சில்லறை விற்பனைநிலைய மேற்பார்வையாளர்களில் ஒருவர் 6. மொத்த விற்பனை நிலைய முகாமையாளர்களில் ஒருவர் 7. சில்லறை பண்டசாலை முகாமையாளர்களில் ஆகக் குறைந்தது மூவர்.

(வளரும்)

---

## கூட்டுறவுப் பயிற்சி

யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரியில் கூட்டுறவுத் தராதரப்பத்திர சாதாரண பிரிவு பயிற்சி ஜனவரி 12ந் திகதி ஆரம்பமாகியுள்ளது. இதில் 57 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். நான்கு மாதங்கள் இப்பயிற்சி தொடர்ந்து நடைபெறும்.

# வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்
# வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு ஆசன அமைப்பு
மின்னொளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

## வாடகைக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| **நாடகம் நடனம்** | | |
| | இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250–00 |
| | பகல் ,, ,, | 200–00 |
| **இசை நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு ,, ,, | 175–00 |
| | பகல் ,, ,, | 150–00 |
| **ஏனைய நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு முதலாவது மணித்தியாலம் | 100–00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40–00 |
| | பகல் முதலாவது மணித்தியாலம் | 75–00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 30–00 |
| **திருமணம் - பகல் அல்லது இரவு** | | |
| | முதல் 3 மணித்தியாலங்கள் | 250–00 |
| | (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50–00 |
| **பிணை** | இரவு | 150–00 |
| | பகல் | 100–00 |

குறிப்பு : கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

தொலைபேசி :
7238

தேசிய கூட்டுறவுச்சபை (யாழ் மாவட்டக் குழு)
12, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

Publlished by the Jaffna District Committee, National Co-operative Council of Sri Lanka Ltd., (formerly known as the Northern Div. Co-operative Federation Ltd.), 12, K.K.S. Road, Jaffna and Printed at the Jaffna Municipality M.P.C.S. Printing Branch, the Co-op Printers Ltd., Jaffna, (formerly Northern Province Co-operative Printing and Publishing Society Ltd.